# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 12 புதன்கிழமை 27.11.2024 கதிர் 65







## தமிழர் தாயகமெங்கும் மாவீரர்களை நினைவுகூர

# கொட்டும் மழையிலும் திரண்ட மக்கள் உணர்வுபூர்வமாக அஞ்சலி நிகழ்வுகள்



கன மழை மற்றும் புயல் எச்சரிக்கையினையும் பொருட்படுத்தாது தமிழர் தாயகமெங்கும் உணர்வுபூர்வமாக மாவீர்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணமெங்கும் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் ஏற்கனவே திட்டமிடப் பட்டிருந்த நிகழ்வுகளில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டு தங்களின் சொந்தங்கள், நண்பர்கள் ஆகியோரை நினைவில் கொண்டு மழைநீருடன் க்ண்ணீர் கலக்க உணர்வுபூர்வமாக அஞ்சலியினை செய்தார்கள்.

## மீட்புப் பணிக்காக விமானப்படை தயார்நிலையில் ஹெலிகொப்டர்கள்



நாட்டில் நிலவும் அசாதாரண வானிலையால் ஏற்பட்டுள்ள அடைமழை காரணமாக அவசர காலங்களில் மக்களை மீட்க 6 ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் உள்ளன.

பலாலி, இரத்மலானை, ஹிகுராக்கொட, , வீரவில, அம்பாறை, அனுராதபுரம் விமானப்படை தளங்களில் ஹெலிகொப்டர்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப்பேச்சாளர் கிகனகே தெரிவித்தார்.


மேலும், அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக விசேட பயிற்சி பெற்ற விமானப்படை படைப்பிரிவின் விசேட அதிரடிப்படையினர் தயார்படுத்தப்பட்டுள்ளதாக விமானப்படை ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## ஓமந்தை பகுதியில் பெரும் வெள்ளம் போக்குவரத்திற்கு மாற்றுபாதை



யாழ்ப்பாணத்துக்கு செல்லும் ஏ-9 பிரதான வீதியில் ஓமந்தை பகுதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் வாகன சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு 2 ➤

# பெருமழை, புயல் அபாயம் தொடர்கிறது வடக்கு மாகாண மக்களிற்கு எச்சரிக்கை



கடந்து கடந்த 23ஆம் திகதி அன்று வங்காள விரிகுடாவில்தோற்றம்பெற்றகாற்றழுத்ததாழ்வுமண்டலம் இன்று மாலை புயலாக மாற்றம் பெறும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது,

வழமையாக வடகீழ் பருவக்காற்று காலங்களில் வங்காள விரிகுடாவில் தோன்றும் தாழமுக்கம் மற்றும் புயல்களின் நகர்வுப்பாதையை ஒரளவு தெளிவாக கணிக்க முடியும்.

ஆனால்இந்தஆழ்ந்தகாற்றழுத்ததாழ்வுமண்டலத்தின் நகர்வுப்பாதையை தெளிவாக கணிக்க முடியவில்லை. அத்தோடு இதன் கரையைக் கடக்கும் இடம் இன்னமும் தெளிவாகவில்லை.

தற்போதைய நிலையின் படி இந்த புயல் வடக்கு வடமேற்கு திசை நோக்கி நகர்ந்து எதிர்வரும் 30ம் திகதியளவில் சென்னைக்கும் கடலூருக்குமிடையில் கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் நகரும் பாதையும் கரையைக் கடக்கும் இடமும் மாற்றமடையலாம் என்பதனைக் கருத்தில் கொள்க.

இந்தஆழ்ந்தகாற்றழுத்ததாழ்வுமண்டலம்காரணமாக கிழக்கு மாகாணத்தின் திருகோணமலைக்கும் வடக்கு மாகாணத்தினுடைய அனைத்து மாவட்டங்களுக்கும் தற்போது கிடைத்து வருகின்ற மழை நாளை வரை தொடர்வதற்கானவாய்ப்புகள்காணப்படுகின்றன. ஆனால் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு சற்று வேகமான காற்றுடன் மிகக் கன மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. 2 ➤



கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்




கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்



கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம்



கனடா



கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம்

## ஓமந்தை பகுதியில் பெரும் ...

பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

யாழிற்குப் பயணிக்கும் வாகனங்கள் ஹெப்பத்திகொல்லாவ, வெலியோயா, முல்லைத்தீவு, பரந்தன் வழியாகவோ அல்லது மதவாச்சி,செட்டிகுளம்,மன்னார் வழியாகவோ மாற்று பாதைகளை பயன்படுத்தலாம் என அறிவுறுத் தப்பட்டுள்ளது.

## பெருமழை, புயல் அபாயம் ...

மட்டக்களப்பு மற்றும் அம்பாறையை பொருத்தவரை இன்று முதல் மழை படிப்படியாக குறைபடையும் ஆனாலும் எதிர்வரும் 30.11.2024 வரை இடை இடையிடையே கனமழை கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன

தொடர்ச்சியாக கிடைத்த வருகின்ற கனமழை காரணமாகவும் குளங்களினுடைய மேலதிகமான உபரி நீர் வான் பாய்வதன் காரணமாகவும் வடக்கு(அனைத்து மாவட்டங்களும்)மற்றும் கிழக்கு மாகாணங்களின் உடைய பல பகுதிகளிலும்(முக்கியமாக மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை)வெள்ள அர்த்தத்துக்கான வாய்ப்புகள் மிக உயர்வாகவே காணப்படுகின்றன.

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் - பாரம்பரிய முறையிலான வாழ்க்கை - ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் - பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி - தியான மண்டபம் - மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் - உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் - பாரம்பரிய உணவகம் - பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் - யோகா நிலையம்
விருந்தினர் விடுதி - சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் - தாரா பண்ணை
பூங்கா - நடைபயிற்சிப் பாதை - உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி - விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்
உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அம்பாறை உழவு இயந்திர விபத்து 2 சிறுவர்களின் சடலங்கள் மீட்பு!



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

அம்பாறை - காரைதீவு, மாவடிப்பள்ளி பாலத்திற்கு அருகில் உழவு இயந்திரம் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் காணாமல் போயிருந்த 2 சிறுவர்கள் இன்று காலை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை இடம்பெற்ற அனர்த்தத்தில் 6 மாணவர்கள் காணாமல் போயிருந்தனர்.

ஏனைய 4 சிறுவர்கள், உழவு இயந்திரத்தின் சாரதி மற்றும் அதில் பயணித்த ஏனைய இருவரையும் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிந்தவூர் மதரஸா பாடசாலையில் கல்விகற்று வந்த சிறுவர்கள் சிலர் நேற்று பிற்பகல் வீட்டிற்கு பயணித்த போதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அனர்த்தம் இடம்பெற்ற போது உழவு இயந்திரத்தில் 14 பேர் பயணித்துள்ளனர்.

உழவு இயந்திரம் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு கவிழ்ந்த சந்தர்ப்பத்தில் 5 சிறுவர்கள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கிளி. மாவட்டத்தில் 3524 பேர் பாதிப்பு வயல்கள் நாசம் – போக்குவரத்து முடக்கம்



தற்போது ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் காணப்படுவதுடன் பலரது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர். பல விவசாய நிலங்களும் நீரினால் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். தற்பொழுது ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தம் காரணமாக பலர் இடைத்தங்கள் முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அந்த வகையில் 1043 குடும்பங்களைச் சேர்ந்த 3524 பேர் இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வட்டக்கச்சி ஊடாக கண்டாவலை செல்லும் பிரதான வீதியில் புளியம்போக்கனை பகுதியில் வீதி குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதன் காரணமாக பெரியகுளம் வட்டகசச்சி செல்லும் வீதி முற்றாக தடைபட்டுள்ளது. - 113






# மிதி வெடி

வேலியில போற ஓணானைப் பிடிச்சு, வேட்டியுக்குள்ள விட்டுட்டுட்டுக் குத்துது, குடையுது எண்ட கணக்காக கிடக்குது பாருங்கோ அந்தாளிண்ட நிலமை.

வயசு போன நேரத்தில உந்தாளுக்கு உது தேவையே? இல்ல.. கேக்கிறன்... நீங்கள் எண்டாலும் சொல்லுங்கோவன்....

எல்லாரும் தலையில தூக்கி வைச்சு ஆடுகினம் எண்டு நினைச்சுக் கொண்டு அரசியலுக்கு வந்தவர், ஆனதா ஒண்டும் செய்யேல்ல... கொண்டு வந்த சிஷ்யப் பிள்ளையிட்டயே வாங்கிக் கட்டிக்கொண்டு ஒண்ட இடமில்லாமல் அங்க, இங்க எண்டு திரிஞ்சு கடைசியா அரசியலே வேணாமெண்டு வந்த இடத்துக்கே திரும்பிப் போட்டார்.

போனாலும், போனார்.... போன பிறகும் நிம்மதியா இருக்க விடுறாங்கள் இல்லப் பாருங்கோ.... கடைசி நேரத்தில இந்த மனுசனும் பிடிக்கிறதுக்கு ஆக்கள் இல்லாமல் சின்னப் பெடியளிட்டக் கட்சியைக் குடுத்துட்டுப் போனதெல்லே... அந்தச் சின்னப் பெடியள் அந்த நன்றிக்கடன் கூட இல்லாமல் ஆட்டைக் கடிச்சு, மாட்டைக் கடிச்சு கடைசியா அந்தாளையும் கடிச்சுப் போட்டினம் பாருங்கோ.... தெருவில நிண்டவையைத் தேரில ஏத்தின அவருக்கும் வேணும் பாருங்கோ...

“ஆடத் தெரியாதவள் அரங்கு சரியில்லை என்றாளாம்” எண்டுமாப் போல தம்பிமாருக்கு கதிரை கிடைக்காததுக்கு அந்த மனுசன் தான் காரணம் எண்டு சொல்லினமாம்... கொஞ்ச நாளைக்கு முன்னம் ஒரு “ரீ.வி” நிகழ்ச்சியில பேசின தம்பி தங்களுடைய தோல்விக்கு அந்தாள் தான் காரணம் எண்டு சொல்லி இருக்கிறார். அதுக்குத் தான் நான் சொல்லுறன் அந்த மனுசன் “வேலியில போற ஓணானைப் பிடிச்சு, வேட்டியுக்குள்ள விட்டுட்டுட்டுக் குத்துது குடையுது” எண்டு.

அப்பிடிச் சொன்னது அந்தத் தம்பியில பிழை இல்லை எண்டு தான் நான் சொல்லுவன். காங்கேசர்டை பேரன் இடம் குடுத்து வளர்த்ததுக்கு நல்லாச் செய்து போட்டு வந்தவை... பிறகு மாநகரத்தில ஆட்சிக்கு வந்ததுக்குப் பிறகு “உங்களக் கண்டது ஆர்?” எண்டு தன்னட்டவாரமா நடந்து கடைசியில

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி – மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி”

எண்டது கணக்கா எல்லாத்தையும் போட்டுடைச்சுப் போட்டினம்.

திக்கில்லாம திரிஞ்சவைக்கு குத்துவிளக்கிலயும் இடமில்லாமல் போக மான் ஆவது மிஞ்சிச்சே எண்டு ஒண்டப் போய்ற்று, அந்தாளையும் வெளியில விட்டுட்டினம்... கடைசி வரையும் ந(க)டந்து வந்த பாதைய மறந்து நாண்டு கொண்டு நிக்கிறது அவையின்ர இயல்பு பாருங்கோ....

ஆரை மிதிச்சாலும்... தாங்கள் வாழ்ந்தாச் சரி எண்டுறது தான் அவையின்ர “பொலிசி” அரசியலுக்கு அறுமுகப்படுத்தி வைச்ச காங்கேசரிண்ட பேரன்ற கோப்பைக்குள்ளயே “பே...டு” போட்டு வந்தவை... மாநகரத்தில ஆட்சி அமைக்கிறதுக்காக கூட்டுச் சேத்தவைக்கும் ஆப்புச் செருகிப்போட்டு ஆட்சிக்கு வந்த பிறகு... இப்ப இந்த மனுசனுக்கு இப்பிடிச் செய்யுறதொண்டும் புதுசில்லைத் தானே? உதில ஆச்சரியப்பட என்ன கிடக்குது? அது அவையின்ர “ஸ்ரைல்” எண்டு சொல்லுங்களன்.

நாலு குளத்துக்குப் பேர் போட்டால் நாப்பதாயிரம் வாக்குக் கிடைக்கும் எண்டு மிதப்பில இருந்தவை, நல்லூரையும், நகரத்தையும் தாண்டினால் ஆருக்குமே அவையளைத் தெரியாது பாருங்கோ...

நீங்கள் வேணுமெண்டா இருந்து பாருங்கோ... “ஜனவரி” யிலநடக்கப் போற “லோக்கல் கவர்மென்ற்” தேர்தலிலயும் மாற்றம் எண்டு சொல்லிக் கொண்டு திசைகாட்டிக்குத் தான் சனம் அள்ளிக் கொட்டப் போகுதுகள்.

மாநகரத்தில இருக்கிற 45 “சீற்”றில 27 வட்டாரமும் அறுதிப் பெரும்பான்மைய அவங்கள் அள்ளிக் கொண்டு போக, மிகுதியிருக்கிற 18 விகிதாசரத்தில போய் குழப்பியடிக்கத் தான் எங்கட ஆக்கள் சரி.... இனியாவது நீ(நா)ங்கள் ஒண்டு பட்டு நிக்காட்டி – உ(எ)ங்களக் காப்பாற்ற அந்த இறைவனாலும் முடியாது பாருங்கோ....

திசைகாட்டி எண்டதும் இண்டைக்கு நடந்த இன்னுமொரு சம்பவம் தான் ஞாபகம் வருகுது... கடும் மழை, சூறாவழியால அனர்த்தம் நடந்தால் என்ன செய்யுறதெண்டு “பிளான்” பண்ண இண்டைக்குக் காலம கச்சேரியில ஒரு கூட்டம் வச்சிருக்கினம்.... கூட்டத்துக்கு இண்டைக்கோ... நாளைக்கோ கதிரையில இருக்கிற கடைசி நாள் எண்டு எண்ணிக்கொண்டு இருக்கிற ஒருத்தர் தான் தலைமை. அரசாங்க அதிகாரிகள் கூடி அடுத்தது என்ன செய்யுறதெண்டு யோசிக்கிறதுக்குத் தான் அந்தக் கூட்டமாம்..

ஆர் அதிகாரத்துக்கு வந்தாலும், அவைக்கு அரிதாரம் பூசுற அந்த “அதி”காரி “என்.பி.பி எம்.பி” மாரில ஒருத்தர மட்டும் கூப்பிட்டிருக்கிறார். அவர் வந்த விதம் மற்ற அதிகாரிகளை முகஞ்சுழிக்க வச்சிருக்குதாம்.

முந்தின காலங்களில தாடி வச்ச அமைச்சர் கூட்டம் நடத்தேக்க அல்லக்கையும், நொள்ளக் கையுமா நிண்டு அரசாங்க அதிகாரிகளை மேய்க்கிறது போல... வயசுகுறைஞ்ச “குமரன்” தன்னோட கூட்டிக்கொண்டு வந்தவரும் நடந்து கொண்டதைப் பாத்துச் சிரிக்கொண்டிருந்தாராம்....

ஊழலற்ற ஆட்சி.... இலஞ்சமில்லாத நாடு எண்டு சொல்லிக் கொண்டு ஆட்சிக்கு வந்தவை வந்த உடனேயே மரவளம் சுரக்கிற அபிவிருத்தி சபைக்குத் தலைவராப் போட்ட “பஞ்ச பாண்டவரில” ஒருத்தருக்குக் கச்சேரியில என்ன வேலை?....

இப்பிடியே போன அந்த அமைச்சர் செய்தது அடாவடி எண்டு சொல்லுற நீங்கள் செய்யுறதுக்கு என்ன பேர்...? எண்டு காலையில “மீற்றிங்”குக்குப் போன அத்தனை அதிகாரிகளும் கேக்கினம்... நான் என்னத்தை சொல்ல..?

அங்க ஆட்சியில இருக்கிறவைக்கு உதொண்டும் தெரியாது எண்டுதான் நினைக்கினம் போல...?

கடற்றொழில் அமைச்சரைக் கையுக்குள்ள வச்சிருந்தா என்னவும் செய்யலாம் எண்டை நிலமை தான் அண்டைக்கும், இண்டைக்கும்.

ஆட்சி மாறினாலும்.. காட்சி மாறேல்ல பாருங்கோ...

–நரமுனி–

# றோட்டறி முன்னாள் ஆளுனர் கௌரி ராஜனிற்கு வியாபார, சமூக அபிவிருத்திக்கான விசேட விருது!




செல்வி கௌரி ராஜன், மலேசியாவில் நடைபெற்ற WIM Global விருது வழங்கும் நிகழ்வின் போது Global Trailblazer விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற Women Top 50 Professional & Career Woman Awards 2024 இன் போது WIM Global இனால் பிரபல முன்னோடி பெண் தொழில்முயற்சியாளரான செல்வி கௌரி ராஜனுக்கு Global Trailblazer விருது வழங்கப்பட்டது. வியாபாரம் மற்றும் சமுதாய அபிவித்திக்கான அவரின் விசேட பங்களிப்பைப் பாராட்டும் வகையில் இந்த விருது வழங்கி வைக்கப்பட்டது. மலேசியாவின் Women in Management (WIM) அமைப்பின் தவிசாளரான பேராசிரியர் கலாநிதி செல்வராஜ் ஓவியன்பிள்ளை இங்கு கருத்து வெளியிடுகையில், 'கௌரி ராஜன், கடினமான காலங்களில் தளராது தாங்கிக்கொள்ளும் ஆற்றல் மற்றும் மனித நேயம் மிக்க பலம்வாய்ந்தவர் ஒருவராவார். Global Trail Blazer Top 50 விருதினை அடுத்து அவரின் குறிப்பிடத்தக்களவான பங்களிப்பு மற்றும் தூரநோக்குடைய கருத்துக்கள். பரந்தளவிலான பூகோள வலையமைப்பு எண்ணக்கருக்கள் அவரின் கைத்தொழிலின் எதிர்காலத்தை ஒழுங்குபடுத்தும் என்பதுடன், உண்மையில் அற்புதமான ஒரு பெண்" என்று குறிப்பிட்டார். WIM ஸ்தாபகரான திருமதி சுலொசனா சிகேரா கருத்து வெளியிடுகையில், இந்த விருதின் மூலம் வியாபாரம் மற்றும் சமுதாய அபிவிருத்திக்கான அவரின் பங்களிப்பு சிறந்த முறையில் வெளிப்படுத்தப்படுவதுடன், "தமக்கு முன் சேவை" என்ற எண்ணக்கருவின் வெளிப்பாடாகும் என்றும் தெரிவித்தார். 9898 மலேசியாவில் நடைபெற்ற பூகோள தலைமைத்துவ மாநாட்டில் செல்வி கௌரி ராஜன் பிரதான உரையாற்றினார். இதன் போது அவர் "சமூக தலையீட்டுக்கு மாற்றம்மிக்க தலைமைத்துவம்" தொடர்பான தமது அறிவைப் பகிர்ந்துகொண்டார். சம்பிரதாயபூர்வமான ஆண் ஆதிக்கம் மிக்க கைத்தொழில்துறையொன்றில் வெற்றிக ரமான ஒரு பெண் என்ற வகையில் தமது தனிப்பட்ட பயணித்திலிருந்து உதாரணங்களைக் குறிப்பிட்ட கௌரி. மாற்றும்மிக்க தலைமைத் துவமானது வியாபாரத்திற்கும் அப்பால் செல்லும் முறை மற்றும் மக்களை பலப்படுத்தல், ஆற்றல்களை வெளிக்கொண்டுவருதல் மற்றும் சமுதாய முன்னேற்றத்தை வழிப்படுத்தும் முறையை பகிர்ந்துகொண்டார். Sum Match கம்பனியின் பணிப்பாளர் என்ற வகையில், அவர் தமது குடும்ப வியாபாரத்தை நம்பகத்தன்மைமிக்க வீட்டு வர்த்தக் குறியீடொன்றாக தமது வகிபாகத்தை உறுதி செய்துகொண்டு மாற்றமடைகின்ற தொழில்முயற்சியொன்றாக மாற்றியமைக்கும் தீர்க்கமான செயற்பணியை நிறைவேற்றினார். மாற்றம்மிக்க தலைமைத்துவம் சமுதாயத்தை பலப்படுத்துகின்ற மற்றும் சகலருக்கும் குரல்கொடுத்தல் மற்றும் செயற்பணியை கொண்டுள்ளதை உறுதி செய்யும் பங்குடைமைசார் நோக்கை சூழ மக்களை ஒன்றிணைக்கின்றது" என்று அவர் வலியுறுத்தினார். சர்வதேச றொட்டரி அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான முதலாவது பெண் மாவட்ட ஆளுநர் என்ற வகையில் செல்வி கௌரி ராஜன் வரலாற்றில் இடம்பிடித்துள்ளமை றொட்டரி ஆண் ஆதிக்கம் கொண்ட துறையில் எதிர்கால பெண் தலைமைகளுக்கு வழிகோளும் வகையில் பலம்வாய்ந்த முன்மாதிரியை உருவாக்கியுள்ளார். இவர் இலங்கையின் றொட்டரி ஆளுநராக கடமையாற்றிய காலப்பகுதியில் அவரின் ஒரு மாற்றம்மிக்க தொழில்முயற்சியின் முன்னெடுப்பாக இருந்தது இலங்கையில் ஒவ்வொரு வருடமும் பிள்ளைகள் 2500 3000 பல்வேறு இருதய நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதும், அவர்களில் பெரும்பாலானோர் அவர்களின் முதலாவது பிறப்பைக் கொண்டாடுவதற்குக் கூட உயிர் வாழ்வதில்லை என்று அறிந்துகொண்ட போதாகும். ஒரு பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை செலவிட்டு பல்வேறு அன்பளிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் ரிஜ்வே சீமாட்டி வைத்தியசாலையில் இலங்கையின் முதலாவது இருதய வால்வு வங்கியை தாபிக்க அவர் முன்னின்று செயற்பட்டார். முக்கியமாக இந்தக் கருத்திட்டத்தின் ஊடாக இதுவரை சுமார் 1500 பிள்ளைகளின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ள போதிலும் இன்னும் பல வேலைகள் எஞ்சியுள்ளன. "ஒவ்வொரு பிள்ளையையும் காப்பாற்றும் வரை நாம் ஓயமாட்டோம். இது எமது அர்ப்பணிப்பாகும்" என்று செல்வி கௌரி குறிப்பிட்டார். கலாநிதி சுலொசனா சிகேரா ஆரம்பித்துவைத்த Women in Management (WIM) Global இனால் இலங்கையிலும், மாலைதீவு, மலேசியா, கனடா, ஐக்கிய அறபு இராச்சியம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஆபிரிக்கா வரை வியாபித்து பல்வேறு துறைகளிலும் பெண்கள் வலுவூட்டப்பட்டுள்ளதை கொண்டாட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. Top 50 Professional & Career Women Global Awards போன்ற நிகழ்ச்சித்திட்டங்கள் சமூக முன் னேற்றத் திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற பெண் தலைமைத்துவத்தின் பலம்வாய்ந்த வலையமைப்பை உருவாக்கி 26 நாடுகளிலிருந்து பெண்கள் 1100 இற்கும் மேற்பட்டோர் பாராட்டப்பட்டுள்ளார்கள். புடழடியட வுசயடைடிடயணநச விருதை அடுத்து செல்வி கௌரி ராஜனின் அங்கீகாரம் மாற்றம்மிக்க சக்தி என்ற வகையில் அவரின் மரபுரிமையை உறுதி செய்கின்றது. அவரின் தலைமைத்துவம் நீண்டகாலம் நிலைத்திருக்கும் சமூக தாக்கத்துடன் தொழில்முயற்சியின் வெற்றியுடன் ஒன்றிணைப்பதை மீண்டும் வரைவிலக்கணம் செய்வதுடன், வாழ்க்கை மற்றும் சமுதாயத்தை ஒழுங்குபடுத்தும் போது தனியொரு தலைவர் மேற்கொள்ளத்தக்க அழுத்தத்தை வெளிப்படுத்துகின்றது. செல்வி கௌரி ராஜனின் பயணம் நோக்கங்களை கொண்ட தலைமைத்துவத்தின் பலத்தை வலியுறுத்துகின்றது. எதிர்கால சந்ததியினருக்கு மனஉறுதி, கருணை, பாசம் மற்றும் நோக்குடன் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு ஊக்கமளிக்க ஒருபோதும் அழியாத அடையாளத்தை பதிவு செய்கின்றது. புகைப்பட விளக்கம் செல்வி கௌரி ராஜனுக்கு விருது வழங்கி கௌரவித்தல்.



# தொடர் மழையின் பாதிப்பு



மாதகல் பாணாவெட்டி அம்மன் கோவிலின் நிலை



நல்லூர் ஆலய சூழல்



பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில்



நல்லூர் ஆலய சூழல்




காத்தான்குடி - மட்டக்களப்பு



சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலயம்

# அடைமழை காரமாக பாலம் உடைவு கல்முனை-அக்கரைப்பற்று போக்குவரத்து தடை



அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும்அடைமழை காரணமாக நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள மாட்டுப்பளை எனும் பிரதேசத்தில் காணப்படும் சிறிய பாலமொன்று உடைப்பெடுத்துள்ளமையால் அக்கரைப்பற்று-கல்முனை பிரதான போக்குவரத்துகள் முற்றாக தடைப்பட்டுள்ளன.

கல்முனை-அக்கரைப்பற்று பிரதான வீதியில் ஒலுவில் களியோடைப் பாலத்தினை அண்டிய பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள இப்பாலம் விவாசய நிலப்பரப்பினை சூழ்ந்த பகுதியில் உள்ளது. கடந்த சில தினங்களாக பெய்து வரும் அடை மழை காரணமாக இப்பகுதி விவசாய நிலப்பரப்புகள் முற்றாக நீரினால் நிறைந்துள்ளது.

விவசாய நிலப்பரப்புக்குள் காணப்படும் நீரானது களியோடை ஒலுவில் ஆற்றினை சென்றடையும் வகையில் வேகமாக பாய்ந்து செல்கின்றது. மாட்டுப்பளை பிரதேசத்தில் காணப்படும்இப்பாலத்தினை நோக்கி வேகமாக நீர் பாய்ந்து செல்லும் வேளையிலேயே இது உடைப் பெடுத்துள்ளதாக நீர்ப்பாசனத்துறை அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இப்பாலம் இன்று நள்ளிரவு வேளையில் முழுமையாக உடைப்பெடுத்தமையால் இப்பாலத்தின் மூலமான போக்குவரத்துகள் முற்றாக தடைப்பட்டுள்ளன. இப்பகுதியின் மூலம் பயணம் செய்ய முற்படுபவர்கள் மாற்று வழிப்பாதையினை பயன்படுத்துமாறு போக்குவரத்து பொலிஸார் பொதுமக்களை வேண்டிக் கொள்கின்றனர்.

அத்தியவசிய தேவை நிமித்தம் கால்நடையாக இப்பாதையினை கடக்க முற்படுவர்களை முப்படையினரும், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்களும், பொதுமக்களும் உதவி புரிந்து பாதையினை கடப்பதற்று உதவிகளை மேற்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகிறது.

இப்பகுதிய நிலைமைகளை அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பின் எம்.ஏ.தாஹிர் நேரில் சென்று பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.







## திருகோணமலை மாவட்ட வெள்ள பாதிப்பு 2208 குடும்பங்களை சேர்ந்த 6512 நபர்கள்

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் இன்று மதியம் 12.30 வரை 2208 குடும்பங்களை சேர்ந்த 6512 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் கே.சுகுனதாஸ் தெரிவித்தார்.

சீரற்ற வானிலை தொடர்பில் ஊடகங்களுக்கு இன்று (27) வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்த அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் இதில் சேருவில பிரதேச செயலாளர் பிரிவில் 12 குடும்பங்களை சேர்ந்த 40 நபர்களும், மூதூரில் 938 குடும்பங்களை சேர்ந்த 2574 நபர்களும், தம்பலகாமம் பிரதேச பகுதியில் 96 குடும்பங்களை சேர்ந்த 301 நபர்களும் , மொரவெவவில் 29 குடும்பங்களை சேர்ந்த 91 நபர்களும் , திருகோணமலை பட்டினமும் சூழலும் பகுதியில் 316 குடும்பங்களை சேர்ந்த 1282 நபர்களும், கிண்ணியாவில் 709 குடும்பங்களை சேர்ந்த 1852 நபர்களும், குச்சவெளியில் 48 குடும்பங்களை சேர்ந்த 129 நபர்களும், கந்தளாயில் 58 குடும்பங்களை சேர்ந்த 235 நபர்களும், வெருகலில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 03 நபர்களும், பதவிசிறிபுர பகுதியில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 05 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் சேருவில, தம்பலகாமம், பட்டினமும் சூழலும், குச்சவெளி ஆகிய பிரதேச செயல பகுதியில் பாதுகாப்பு நிலையங்களிலும் பாதிக்கப்பட்ட சில குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன் 668 குடும்பங்களை சேர்ந்த 2369 நபர்கள் உறவினர்களின் வீடுகளுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். குறித்த கன மழை காரணமாக 24ஆம் திகதிமுதல் இன்று வரை பகுதியளவில் 14 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் பிரதி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## மரம் முறிந்து வீழ்ந்ததில் போக்குவரத்து ஸ்தம்பிதம்




(ஹஸ்பர் ஏ.எச்)

தற்போது நிலவி வரும் சீரற்ற காலை நிலை காரணமாக இன்று தம்பலகாமம் சந்தியின் திருகோணமலை கண்டி பிரதான வீதியில் பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்ததையடுத்து போக்குவரத்து ஒரு சில மணிநேரம் ஸதம்பிதமடைந்து காணப்பட்டது.

இதனை அடுத்து தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதளுக்கிணாங்க வீதி அபிவிருத்தி அதிகார சபை, தம்பலகாமம் பொலிஸார், இராணுவத்தினர்கள் இணைந்து குறித்த மரத்தை அப்புறப்படுத்தியிருந்தனர்.

# புயல் - வெள்ள அனர்த்தம் எதிர்கொள்ள தயாராக உள்ளோமா?




**திருநாவுக்கரசு தயந்தன்**

வடக்கு கிழக்கு மாகாணத்தின் வெள்ள நிலைமைகள் எல்லை மீறிக்கொண்டிருக்கின்றது!

நாளையும் மழை தொடரும் வாய்ப்பே அதிகமாக இருப்பதால் பல இடம்பெயர்வுகளும் அனர்த்தங்களும் நிகழும் வாய்ப்பு அதிகம்!

அரச நிர்வாக கட்டமைப்பில், அனர்த்த முகாமைத்துவத்தில் உள்ள விதானைமார் உள்ளிட்ட அனைவரும் உங்கள் தொலைபேசிகளை இயங்குநிலையில் எப்பாடுபட்டாவது வைத்துக்கொள்ளவும். சில பெண் விதானைமார் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் களத்தில் உள்ள அதேவேளை சிலரை தொடர்புகொள்ள மக்கள் திண்டாடிவருகிறார்கள்!

அதேநேரம் உங்களால் சமாளிக்கக்கூடிய நிலமைகளில் உதவிகளுக்கு அழைக்கவேண்டாம். எல்லோரும் பாதிக்கப்பட்டிருப்பதால் உதவி செய்ய களத்தில் இருப்பவர்கள் முதலில் ஆதரவற்ற முதியவர்கள், குழந்தைகள், பொருளாதார நலிவுற்று ஆதரவற்று இருப்பவர்களுக்கு உதவ வேண்டி உள்ளது. உங்களால் அயலவர்களின் உதவியுடன் சமாளிக்க முடியுமாயின் தயவு செய்து சமாளிக்கவும்.

வடமாகாணத்தின் அத்தனை குளங்களும் நிரம்பிவிட்டன! மழை தொடரும் பட்சத்தில் அணைக்கட்டுகளும் பாதிப்புக்கு உள்ளாகலாம். நீர்ப்பாசண திணைக்களத்தினர் கடந்த மூன்று நாட்களாக இரவு பகலாக களத்தில் உள்ளனர். அவர்களால் முடிந்ததை அவர்கள் செய்ய முனைகின்றனர்.

| Daily Tank water level and Rainfall Detail in Vavuniya, Cheddikulam Division. Reporting Date 27-11-2024. Time 1.p.m | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Date:- 27-11-2024 | | | | | | | | | | :- Sluice not available | | |
| Nos | Tank | FSD | Capacity at FSD (Ac.Ft) | Water Level | Capacity (Ac.Ft) | Current Capacity (%) | LB | C1 | C2 | RB | Design Aflux (inch) | Spilling Height (inch) |
| 01 | Vavuniyakulam | 13'-00" | 1,970.00 | 14'-01" | 1,970.00 | 100% | - | | | - | 13.20 | 13" |
| 02 | Maharambaikulam | 11'-01" | 655.00 | 13'-06" | 655.00 | 100% | - | | | - | 34.80 | 29" |
| 03 | Kalmadu | 10'-00" | 1,037.00 | 12'-00" | 1,037.00 | 100% | | - | | | 18.00 | 24" |
| 04 | Pampaimadu | 11'-00" | 875.00 | 12'-07" | 875.00 | 100% | - | - | | - | 18.00 | 19" |
| 05 | Moonayamadu | 07'-00" | 367.82 | 09'-02" | 367.82 | 100% | - | | | - | 24.00 | 26" |
| 06 | Kanagarayankulam | 13'-00" | 1,100.00 | 14'-03" | 1,100.00 | 100% | | - | | | 18.00 | 15" |
| 07 | Chemamadu | 11'-00" | 2,560.00 | 12'-00" | 2,560.00 | 100% | - | | | - | 24.00 | 12" |
| 08 | Velankulam | 10'-00" | 773.07 | 10'-08" | 773.07 | 100% | - | | | - | 24.00 | 8" |
| 09 | Nampankulam | 09'-09" | 898.40 | 10'-11" | 898.40 | 100% | - | | | - | 24.96 | 14" |
| 10 | Malikai | 11'-00" | 786.38 | 13'-04" | 786.38 | 100% | - | | | - | 20.40 | 28" |
| 11 | Kombuvaithakulam | 09'-00" | 764.86 | 09'-08" | 764.86 | 100% | - | | | - | 24.00 | 8" |
| 12 | Aliyamaruthamadu | 07'-03" | 459.88 | 07'-11" | 459.88 | 100% | - | - | - | - | 24.00 | 8" |
| 13 | Mamaduwa | 12'-09" | 3,030.00 | 15'-03" | 3,030.00 | 100% | - | - | | - | 33.00 | 30" |
| 14 | Madukanda | 13'-03" | 1,400.00 | 13'-10" | 1,400.00 | 100% | - | | | - | 28.80 | 7" |
| 15 | Mahakachakodiya | 12'-06" | 1,157.21 | 13'-07" | 1,157.21 | 100% | - | - | | - | 30.00 | 13" |
| 16 | Eroporthana | 10'-00" | 650.00 | 11'-06" | 650.00 | 100% | - | | | - | 24.00 | 18" |
| 17 | Periyathampanai | 09'-06" | 1,095.00 | 10'-08" | 1,095.00 | 100% | - | | | - | 42.60 | 14" |
| Rainfall | | Vavuniya | | | Chemamadu | | | Kanagarayankulam | | | | |
| Date:- | 26-11-2024 | 12.00 PM | | 16 mm | 12.00 PM | | - | 12.00 PM | | 20 mm | | |

மலைப்பிரதேசம் தடுப்பணையாக உள்ளதால் இலங்கையின் மத்தியை ஊடறுத்து புயல் கரையை கடக்கும் வாய்ப்பு மிகக் குறைவு. ஆனால் வடமாகாணத்தை ஊடறுக்கு வாய்ப்பு இருந்தாலும் தற்போதய நிலையில் வடக்காக நகர்ந்து இந்தியாவில் கரையை கடக்கும் வாய்ப்பே அதிகம் உள்ளது. ஆனால் கரையை கடக்கும் முன்பாக இன்னும் 3 தினங்கள் வங்காள விரிகுடாவில் நிலைகொள்ளும் வாய்ப்பை தெரிகிறது. முழுமையாக கரையை கடக்கும் வரை மழை விட்டு விட்டு தொடரும் ! திசைமாறி வடக்கு மாகாணத்துள் நுளைந்தால் விளைவுகள் பாரதூரமாகும்.

பேரனர்த்தம் நிகழும் போது அதை சுயலாபத்திற்கு பயன்படுத்திக்கொள்ளாமல் ஒரு சமூகமாக எதிர்கொள்வது மிகவும் முக்கியமானது. ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்வது அவசியம். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியங்களும் தன் ஆர்வலர் அமைப்புகளோடு "மக்கள் செயல்" இயக்கமாக களப்பணிகளில் இணைந்திருப்பது வரவேற்கத்தக்கது.

இந்தப் புயல் கடந்து சென்ற பின்னரும் டெங்கு ஒழிப்பு உள்ளிட்ட பல தொடர் பணிகளை கவனிக்கவேண்டி இருக்கும்.

சமூக அமைப்புகள் அரச நிர்வாக கட்டமைப்புகள் ஒருங்கிணைந்து பயணிப்பது அவசியம்.

இனிமேலாவது மாரிகாலத்துக்கு முன்னர் நீர் நிலைகளை, வாய்க்கால்களை சுத்தப்படுத்தி ஆழமாக்கி தயார்ப்படுத்துவதை சட்டமாக்குங்கள்! மக்கள் அதிகம் வாழும் பிரதேசங்களில் வெள்ளத்தை கையாள அந்த நடவடிக்கைகள் பேருதவியாக இருக்கும். பிரதேச ரீதியாக கட்டாயமாக்கப்படவேண்டும்.

இந்த புயல் தொடர்பான முன்னறிவிப்புகள் ஒரு வாரத்துக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்தும், அனர்த்த முகாமைத்துவம் திட்டமிடப்பட்டிருந்தும் பல சவால்களை கடந்துசெல்லவேண்டியிருப்பது நம் நீண்டகால சிந்தனைப்போக்கில் பல விடையங்களில் மாறவேண்டி இருப்பதை மீள நிரூபிக்கிறது.

2024.11.27




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2024 இல் வெளியிடப்பெற்றது.